Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 16 ஆம் நாள் ஷவ்வால் 11. (29-3-61) புதன்கிழமை இதழ் 40

Tegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

யாழ்ப்பாணத்தில்

# கொட்டும் மழையிலும் விடாது மறியல்

## அரசாங்க அதிபர் வீட்டுவாசலில் தொண்டர்கால்விரல்நெரிந்தது

யாழ்ப்பாணம், புதன்

கொதிக்கும் வெயிலில் கச்சேரி வாசல்களில் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த தொண்டர்களுக்கு நேற்றுப் பிற்பகல் இரண்டரை மணியளவில் கடுமையான மழை பெய்து குளிர்ச்சி செய்தது. சில நிமிஷங்கள் தொண்டர்கள் நனைந்தனரெனினும் இருந்த இடம் விட்டு நகரவில்லை.

சுமார் பதினைந்து நிமிஷங்கள் கச்சேரியடியில் மழை 'கொட்டு கொட்டென்று' கொட்டிய போதிலும் யாழ்ப்பாண நகரின் இதர பகுதிகளில் சில இடங்களில் மழைத் தூற்றல் மட்டும் விழுந்தது. மற்றைய இடங்களில் தூற்றல் கூட விழவில்லை.

நேற்று மாலைவரை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா தலைமையில் மறியல் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் இதர தலைவர்களுடன் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் திங்கட்கிழமை மாலை தொடக்கம் இரவும் பகலும் மறியலில் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை தொடக்கம் இன்று மாலைவரை உடுப்பிட்டித் தொகுதி மக்கள் திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு-உள்நாட்டு அமைச்சு கூட்டறிக்கை

கொழும்பு, புதன்

தமிழ்ப்பிரதேசங்களில் சத்தியாக்கிரக இயக்கத்தில் மாறுதல் இல்லை என பாதுகாப்பு வெளிவிவகார, கைத்தொழில், உள்நாட்டு கலாச்சார அமைச்சு நேற்று கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கை மேலும் கூறுவதாவது:-

"மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், வவுனியாவில் நிலைமையில் எவ்வித மாறுதலுமில்லை. வேலைக்கு ஆஜரான அதிகாரிகளின் உதவியுடன் அரசாங்க அதிபர்கள் அத்தியாவசிய சேவைகளை மேற்கொண்டுள்ளார்கள். மேற்குறித்த எல்லாப் பகுதிகளிலும் அரிசியும், மாவும் ஒழுங்காக விநியோகம் செய்யப்பட்டது. க்ஷயரோக நோயாளர்களுக்குத் தர்மப்பணம் வழங்கப்பட்டது.

உத்தியோகஸ்தர்கள் சம்பளம், பென்ஷன் ஆகியவையும் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கச்சேரி உத்தியோகஸ்தர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. திங்கட்கிழமை காலை சமஷ்டிக் கட்சி அங்கத்தினர் ஒருவர் அரசாங்க அதிபரைக் கண்டபின், பங்கீட்டரிசியைப் பெறுவதற்கு வாசஸ்தலத்திற்குள் செல்லவிடாமல் வாசலில் மறியல் செய்ய சமஷ்டிக் கட்சி தீர்மானித்தது.

சமஷ்டிக் கட்சியின் நடவடிக்கை காரணமாய் யாழ்ப்பாண மக்களுக்கு பெருங் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாதாமாதம் ரூ. 1,10,815 தர்மப் பணமாகப் பெறும் 10,880 பேர்கள் இருக்கின்றனர். 2347 பேர் க்ஷயரோக அலவன்ஸ் பெறுகின்றனர். அவர்களுக்கு மாதம் 1க்கு ரூ. 80,350 கொடுக்கப்படுகிறது.

இது தவிர 1300 விதவைகளும், அனாதைகளும், மாதப் பென்ஷன் பெறும் மற்றும் 2900 பேரும் இருக்கின்றனர். வாசலில் மறியல் செய்வதின் காரணமாய் இப்பணத்தை வழங்குவது சாத்தியமாயில்லை"

---

## உணவுக் கமிஷன் அறிவிப்பு

கொழும்பு செவ்வாய்

தோட்டச் சுபரீண்டன்களிடமிருந்து மானிய விலையில் மாதம் அரை ரூத்தல் மைசூர் பருப்பு வீதம் ஒருவர் பெற்றுக் கொள்ளலாமென்று விநியோக அதிகாரம் பெற்றவர்கள், வழங்கத் தவறினால் அவர்களது லைசன்ஸ் ரத்துச் செய்யப்படுமென்றும் உணவுக் கமிஷனர் அறிவிப்பொன்று கூறுகிறது.

## தமிழரசுக்கட்சி செயற்குழு கூட்டம்

### மாணவர்களுக்கும் அழைப்பு?

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் உரிமைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு வயதுவந்த மாணவர்களுக்கு தமிழரசுக்கட்சி விரைவில் அழைப்பு விடுக்குமென அறியப்படுகிறது. இன்றுள்ள நிலையில் வயதுவந்த மாணவர்களைப் போராட்டத்துக்கு அழைக்கவேண்டிய அவசியம் பற்றி தமிழரசுக் கட்சியின் செயற்குழு நேற்று மாலை கூடி ஆராய்ந்ததாக அறியப்படுகிறது.

போராட்டம் ஆரம்பித்த சமயத்தில் அதில் கலந்து கொண்ட மாணவர்களை பாடசாலைக்குச் செல்லும்படியும் அவசியமேற்படும் போது அழைப்பு விடுக்கப்படுமென்றும் தலைவர் திரு. எஸ். ஜே. வி. வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த வேண்டுகோளைத் தொடர்ந்து பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் திரும்பினர்.

ஆனால் மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் மாணவர் மன்றத்தினர் இன்னமும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கச்சேரியிலிருந்து விழுந்த கல்

### யாழ்ப்பாண மேயர் புகார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நகரமேயர் முன் கச்சேரியுள்ளிருந்து கல்லொன்று வந்து விழுந்தது குறித்து அவர் உதவி அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளார்.

நேற்றிரவு சுமார் 9 மணிக்கு மேயர் திரு. டி. எஸ். துரைராஜா கச்சேரிக்கு முன் நடைபெறும் மறியல் இயக்கத்தைப் பார்வையிடச் சென்றிருந்த பொழுது கச்சேரியுள்ளிருந்து அவர் முன்னால் ஒரு கல் வந்து விழுந்தது. கல்லை அவர் உடனே உதவி அரசாங்க அதிபரிடம் எடுத்துச் சென்று அது பற்றிப் புகார் செய்ததோடு கல்லைப் பெற்றதற்கு அவரிடமிருந்து ஒரு பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொண்டார்.

இன்று இது பற்றி தாம் அரசாங்க அதிபரிடம் முறையிடப்போவதாக மேயர் தெரிவித்தார்.

## 'மோசமான நிலைமை ஏற்படாமல் தடுத்தனர்'

### போட்டி மறியல்பற்றி புரக்டர் நவரத்தினம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"சத்தியாக்கிரகத்தை முறியடிக்கும் திட்டத்தின் ஒருபகுதியா, இல்லையா என்பது நான் சொல்லவேண்டியதல்ல. ஆனால் மிகவும் அபாயகரமான நிலைமை ஏற்படாமல் சத்தியாக்கிரகிகள் நடந்துகொண்டார்களென்பது மட்டும் உண்மை" என்று தமிரசுக்கட்சிப் பொதுக் காரியதரிசி, சிங்கள ஊழியரின் போட்டிச் சத்தியாக்கிரகம்பற்றிக் கூறுகிறார்.

திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணக் கச்சேரியின் 'பழைய பூங்கா' வாசலில் மறியல் செய்துகொண்டிருந்த தொண்டர்கள் மத்தியில் கச்சேயினுள் வேலைக்குக் கொண்டுவரப்பட்ட சில சிங்களவர் திடீரென்று வந்து உட்கார்ந்து 'சத்தியாக்கிரகம்' செய்தனர். இச் சம்பவம் குறித்து தமிழரசுக் கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. வி. நவரத்தினம் நேற்று ஒரு அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

அருவருப்பான சம்பவம் நிகழக்கூடிய ஒருநிலைமை நேற்றிரவு தோன்றிய போதிலும் அந்நிலைமையைக் கட்டுப்பாட்டுடனும் அமைதியுடனும் சமாளித்த சத்தியாக்கிரகிகளை நான் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்குச் செல்லும் வாச

(5ம் பக்கம் பார்க்க)

## ஐந்து எதிரிகளுக்கும் மரணதண்டனை

### பலாலி கொலைவழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

பலாலி கிழக்குக் கொலை வழக்கில் ஐந்து எதிரிகளுக்கும் மரண தண்டனை விதித்து நீதியரசர் என். சின்னத்தம்பி நேற்றுத் தீர்ப்பளித்தார்.

பலாலி கிழக்கைச் சேர்ந்த பி. நல்லையா, எஸ். கந்தையா, கே. நவரத்தினம், வி. நல்லையா, எஸ். சரவணமுத்து ஆகியோர் சட்டவிரோதமாகக் கூடியதாகவும் 1959-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் திகதி கந்தையா தர்மலிங்கம் என்பவரைக் கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் என். சின்னத்தம்பியின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் எதிரிகள் குற்றவாளிகளென ஜூரிமார் சபை ஏகமனதாகத் தெரிவித்தது.

இதே வழக்கு முன்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது ஒரு ஜூரியை ஒருவர் சந்திக்க முயன்றதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜூரிகள் சபையைக் கலைத்துவிட்டுப் புதிய ஜூரிகள் முன் விசாரணை நடைபெற வேண்டுமென நீதியரசர் கூறியது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு எஸ். சிவராசா வழக்கு விசாரணை நடத்தினர்.

1, 3, 4-ம் எதிரிகளின் சார்பில் திரு. டி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. வி. எஸ். பார் குமாரகுலசிங்கமும், 2-ம், 5-ம் எதிரிகளின் சார்பில் திரு. டி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. டி. டபிள்யு. இராஜரத்தினமும் ஆஜரானார்கள்.

ஐந்து எதிரிகளின் சார்பிலும் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

விசாரணை முடிவில் எதிரிகள் ஐவரும் குற்றவாளிகளென ஜூரிகள் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

எதிரிகள் ஐவருக்கும் மரண தண்டனை விதித்து நீதியரசர் தீர்ப்பளித்தார்.

---

## வங்கி குமாஸ்தாக்கள் வேலைநிறுத்த தீர்மானம்

### ஏப்ரல் 4-ந்திகதி

கொழும்பு, மார்ச் 28

வருகிற ஏப்ரல் மாதம் 4-ந் திகதியன்று வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று வங்கி குமாஸ்தாக்கள் சங்க நிர்வாக சபை தீர்மானித்தது. பொதுச் சபை 3-ந் திகதிகூடி இத்தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்த பின், 3000 குமாஸ்தாக்கள் வேலைநிறுத்தம் செய்வர். சம்பள உயர்வு முதலிய பல கோரிக்கைகளை குமாஸ்தாக்கள் சங்கம் கேட்டுள்ளது.

### மணிவாக்கு

மனத்தைரியம் இன்றேல் வாய்மையில்லை. வாய்மை இன்றேல் மற்ற அறங்கள் இல்லை.

—ஸ்கொட்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 16 உ (29-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## வெளியேறும் செல்வம்

நமது உணவுக்காக மட்டும் இலங்கையிலிருந்து வருடா வருடம் சுமார் 80 கோடி ரூபாய் வெளியேறுகிறதாம். நாட்டின் அபிவிருத்திக்குப் பயன் படவேண்டிய இச்செல்வம் உணவு இறக்குமதிக்காகச் செலவாகிவிடுவதாயும், இலங்கையிலேஉணவுஉற்பத்தியைப் பெருக்க, அரசாங்க அதிபர்கள் புதிய நான்கு அம்சத் திட்டத்தை ஊக்கத்துடன் நடத்திவைக்க வேண்டுமென்றும், காரியாதிகாரிகள், மற்ற அரசாங்கசிப்பந்திகள் இவர்களது பூரண ஆதரவைப் பெற வேண்டுமென்றும், விவசாய மந்திரி கேட்டிருக்கின்றார்.

அரசாங்க அதிபர்களோ, அதிகாரிகளோ மட்டும் உணவு சுயதேவைத் திட்டத்தை நிறைவேற்றிவிட முடியாது. இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு உழைப்பாளரின் ஒத்துழைப்பும் பூரணமாக இருந்தாலே, இத்திட்டம் ஓரளவாவது வெற்றி பெற முடியும். இதற்கு அரசாங்கத்தின் அடிப்படையான சில குறுகிய கொள்கைகள் மாற வேண்டியது அவசியமாகும்.

நமக்கு வேண்டிய அரிசி, தானியவகை, மீன் வகை முதலிய உணவுப்பெருள்களை இங்கேயே நாம் உற்பத்தி செய்து பெறுவதற்கான இயற்கை வளமெல்லாம் இலங்கையில் போதிய அளவு உண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெல், தானிய சாகுபடிக்கு ஏராளமான நிலங்களுள்ளன. ஆனால் ஒரு வகுப்புவாத குடியேற்றத் திட்டக்கொள்கையை வைத்துக்கொண்டு, அப்பகுதிகளில் விவசாய அபிவிருத்தி துரிதமாக ஏற்படமுடியாதபடி அரசாங்கமே தடுத்து வருகின்றது.

மலைநாட்டிலே முதல்தர விவசாய உழைப்பாளர் லட்சக்கணக்கில் உள்ளனர். தோட்டங்களில் வேலையில்லாமல் அவர்கள் உழைப்பெல்லாம் வீணாகின்றது. அவர்கள் இந்நாட்டைச் சேர்ந்தவர்களல்லவென்றும், அவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தி விட வேண்டுமென்றும் அரசாங்கம் திட்டம் போட்டுள்ளதேயன்றி அந்த உழைப்பாளர் இந்நாட்டின் பெரிய செல்வம் என்பதை உணர்ந்து, அவர்கள் உழைப்பை, நன்கு பயன் படுத்திக் கொள்ளும் எந்த யோசனையும் அரசாங்கத்துக்கு இல்லை. இது நாட்டுக்கே பெரிய துரதிருஷ்டம். வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுதவன் கதை போலுள்ளது இந்நிலை.

நான்கு புறமும் பெரிய கடல்களிலே மீன் செல்வம் இருந்தும், மீன்வகைகள் இறக்குமதிக்காக கோடிக்கணக்கான பணத்தை வெளிநாட்டுக்கு அனுப்பி வருகின்றோம். இங்கு கடல்தொழிலாளர்கள் ஏராளமாக உள்ளனர். அவர்கள் பொதுவாக ஏழைகள். பழைய கால முறைகளையே அவர்கள் பின்பற்றுகிறார்களேயன்றி, நவீன முறைகளைக் கைக்கொள்ள அவர்களுக்குப் பணவசதியோ, பயிற்சியோ கிடையாது. இதில் வருமானம் குறைந்து வருவதால் அவர்கள் வேறு தொழிலில் கவனம் திருப்புகின்றனர். ஜப்பானுடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தப்படி, நீர்கொழும்பில், ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்தி, வருடம் 20 பேருக்கு கடல் தொழிலில் நவீன பயிற்சி அளிக்க இருப்பதாகச் செய்தி தெரிவிக்கிறது. ஆனால் யானைப் பசிக்கு சோளப்பொரி என்பது போல், நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய, இது சற்றும் போதாது. ஜப்பானில் மீன பிடித்தல் பெரியதோர் தொழிலாக நடைபெறுகின்றது. அவ்வித முறையில் இங்கும் அமைத்து நடத்த ஏற்பாடு செய்த வேண்டும்.

இதற்கெல்லாம் அடிப்படையாக வேண்டியது, நாட்டில் அமைதியும், சமூகஒற்றுமையும். ஆனால் துரதிருஷ்ட வசமாக, மொழி முதலிய விஷயங்களில் வீண் பிரச்சினைகளைக் கிளப்பி விட்டு, நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் குலைத்துக் கொண்டு உணவு உற்பத்தியையும், கைத்தொழில்அபிவிருத்தியையும் தடைபடுத்திக்கொண்டிருக்கிறது அரசாங்கம். நாட்டிலுள்ள இருமுக்கிய அரசியல் கட்சிகளும் போட்டாபோட்டியுடன் கொண்டுள்ள வகுப்புவாத குறுகிய நோக்கங்களை அடியோடு விட்டு, மனிதாபிமானத்துடன், தேசாபிமானத்துடன் நாட்டின் அபிவிருத்தியையேமுக்கியமாகக் கருதிக் காரியம் செய்ய முற்பட்டால்தான் இங்கு உணவு உற்பத்தியும், கைத்தொழில்களும்பெருகவும், வேலையில்லாக் கஷ்டங்கள் குறையவும் நாட்டின் செல்வம் வெளியேறாமல் நாடுசிறப்புடன் முன்னேறவும் முடியும்.

# 32மைல் அங்கப்பிரதக்ஷணம் செய்யும் திபேத்திய பக்தர்கள்

## யோகிராஜ் கண்ட கைலாசக் காட்சி

"புத்த மதத்தைச் சேர்ந்த திபேத் மக்களின் திவ்ய க்ஷேத்திரமாக கைலாச மலை விளங்குகின்றது. கயிலையை திபேத்தியர்கள் "காங்ரிங் போஷி" என்று கூறுகின்றனர். இங்கே பௌத்த முனிவர்கள் நூற்றுக்கணக்கில் தவம் செய்து நிர்வாணமடைந்துள்ளனர்.

கயிலையின் நெடுமுடியே பௌத்த ஸ்தாபனம்போல் காட்சி தருகிறது. இதன் வீதியில் நான்கு பௌத்த மடாலயங்கள் இருக்கின்றன. அவற்றிலுள்ள லாமாக்களே கயிலை நாதனுக்கு நித்திய நைமித்திக பூஜை செய்கின்றனர். பூஜைக்கு யாத்திரிகர்களிடம் பணம் கேட்பதில்லை. விரும்பியவர்கள் காணிக்கை செலுத்துகின்றனர்.

"தும் சக்" என்ற கடவுள் புலியுடையும், தலை மாலையும், கையிந்துடியம், திரிசூலமும் ஏந்தி கயிலையில் வீற்றிருக்க அவரருகே "கண்டோ" என்ற சக்தி எழுந்தருளியுள்ளார். அவர்களோ பன்னூறு போதி சத்தவர்கள் சூழப் புத்தபெருமானும் சிகரத்தில் வாழ்ந்து வருகின்றார். இச் சூழலில் தேவர்கள் உலாவி வருகின்றனர். இன்னிசை அங்கே இடைவிடாது ஒலிக்கிறது. இறைவனிடத்து உண்மை அன்பு உடையவர்களுக்கு அந்த தேவ கானத்தைக் கேட்க இயலும்."

என்றிவ்வாறு கயிலைமலைக்குப் பக்கத்திலுள்ள டோராபுக்கும்பாவின் தலைமை லாமா கயிலை மலையைப்பற்றிய தீபேத் மக்களின் கருத்தை, தம்மிடம் தெரிவித்ததாக, கண்டியிலிருந்து கயிலாயத்துக்கு யாத்திரை சென்ற யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தர் எழுதியுள்ள "கைலாசம் கண்டேன்" எனும் அருமையான யாத்திரை நூலில்தெரிவிக்கின்றார். கயிலாசத்தைப்பற்றி தீபேத்திய பௌத்த லாமா மேலும் கூறியதாவது:-

லாமாக்கள் இரவும் பகலும் மணிமந்திரம் ஓதி இறைவனைத் துதிக்கின்றனர். காலம்தவறாது கயிலையங்கிரியை வந்தித்து, வழிபடுகின்றனர். திபேத் அரசாங்கமே கயிலை வழிபாட்டில் மிகவும் கருத்துடையதாக இருக்கிறது. (திபேத், சீனர்கள் வசம் ஆவதற்குமுன் இருந்த நிலை இது. இப்போது என்ன மாறுதல் ஏற்பட்டுள்ளதோ தெரியவில்லை.) 32 மைல் சுற்றளவுள்ள கயிலையங்கிரியை திபேத் மக்கள் ஆனந்தம் பொங்க வலம் வருகின்றனர். குறித்த கால எல்லைக்குள் 51 முறை பிரதட்சணம் செய்து வழிபடுவதைப் பெரும் தவமாகக் கருதுகின்றனர்.

இன்னும் சிலர் கயிலை வீதியான 32 மைல் தூரத்தையும் சாஷ்டாங்கப் பிரதக்ஷணம் செய்கிறார்கள். பனியும், பனிப்பாறைகளும், மேடுபள்ளமும், ஓடைகளும், உடைவுகளும் நிறைந்த வழியிலே அவர்கள் அங்கப்பிரதக்ஷணம் செய்யும் முறை வியக்கத்தக்கது. காலைக் கதிரவன் ஒளியிலே கயிலையங்கிரியை நோக்கி, தலைமீது கைகூப்பி வணங்கிவிட்டு தம்மிடம் வைத்துக்கொண்டிருக்கும் சிறு உணவு மூட்டையையும், இரண்டொரு கம்பளித் துணிகளையும், எடுத்துக்கொண்டு நடப்பவர்கள் அந்த நாளுக்குள் சாஷ்டாங்கப் பிரதக்ஷணம் செய்து முடியக்கூடிய தூரத்தை அடைந்து அம் மூட்டைகளை அங்கே வைத்துவிட்டுத் திரும்பியும் புறப்பட்ட இடம் வந்துசேர்ந்து, கைலைநாதனைப்பார்த்துத் தலைமிசை குவித்த கையுடன் பிரார்த்தனை செய்கின்றனர். பிரார்த்தனை முடிந்ததும் அப்படியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி நீட்டிய கைகளின் விரல்கள்பட்ட இடத்திலே தரையில் ஒரு கோடு கீறிவிட்டு எழுந்து நின்று வணங்கிப் பிரார்த்தனைசெய்து கொண்டே, இட்ட கோடுவரை மெல்ல நடந்து செல்லுகின்றனர். கோட்டின்மீது நின்று மீண்டும் தலைமேற் கைகூப்பி வணங்கிப் பிரார்த்தித்து நெடுக வீழ்ந்து, கோடிட்டு எழுந்து நின்று வணங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு சூரியன் மறையும் வரை அங்கப்பிரதக்ஷணம் செய்து, பொழுதுபட்ட இடத்திலேயே இரவுமுழுதும் தங்கி மறுநாள் சூரியன் உதித்ததும் முன்நாள்போலச்செய்து பிரதக்ஷணத்தை ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு 32 மைல்களும் பிரதக்ஷணம்செய்ய 28 நாட்கள் ஆகின்றன. மக்கள் தமது தளராத உறுதியினாலும் நிறைந்த பக்தி சிரத்தையாலும், இத்தலத்தை மிகப் பழைய காலத்திலிருந்தே செய்துவருகிறார்கள்.

இலங்கை இராவணன், கயிலாசகிரியைத் தூக்கிச் செல்ல முயன்ற கதையை திபேத்திலும் கூறுகிறார்கள். இராவணன் என்பது யார்? நமக்குள்ளேயுள்ள இரஜோ குணம்தான். மனமானது எதை எண்ணுகிறதோ அப்பொழுது எண்ணிய பொருளின் வடிவத்தை எடுத்துக் கொள்ளுகிறது. அதையே இராவணன் எண்ணும் வடிவமெல்லாம் எடுக்கும் தன்மையன் என்று கூறுகின்றனர். ஞானேந்திரியங்கள் ஐந்தையும், கர்மேந்திரியங்கள் ஐந்தையும் மனது தொழிற்படுத்தி வேலைசெய்விப்பதையே இராவணன் பத்துத் தலையுடன் வாழ்ந்தான் என்று உருவகிக்கின்றனர்......"

இவ்வாறு புரட்சித் துறவியான சுவாமி சச்சிதானந்தர் தாம் கயிலாசத்துக்குச் சென்ற கதையை, வெகு ருசிகரமாகவும், தத்துவக் கருத்துக்களை ஆங்காங்கே விளக்கியும் இந்த யாத்திரை நூலை இனிய தமிழிலே எழுதியுள்ளார். 196 பக்கங்களுள்ள இந்த நூலில் ஆங்காங்கே பல படங்கள் விளக்கம் தருகின்றன. பெரிய சிவலிங்க வடிவில் காட்சியளிக்கும் கயிலாய நாதன் முகப்பு அட்டையும் வர்ணப் படமும் மிகவும் கவர்ச்சியாகவுள்ளன. அடியிலே இராவணன் கயிறுபோட்டு இழுத்த அடையாளங்களுமுள்ளன!

['இமய ஜோதி' சற்குரு பகவான் சிவானந்த சுவாமிகளின் பாதாரவிந்தங்களுக்கு சமர்ப்பித்துள்ள இந்நூலின் விலை ரூபாய் 3. கிடைக்குமிடம் திவ்ய ஜீவன சங்கம், சச்சிதானந்த தபோவனம், தென்னக்கும்பரை, கண்டி.]

## இசை, நடன போட்டி ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்வாய்

வருகிற ஏப்ரல் முதலாம் தேதி நடத்தப்படவிருந்த அகில இலங்கை இசை, நாடக, நடனப் போட்டி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கல்வி, ஒலிபரப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## ஐயாறன் எழுதுவது

இன்று அரசாங்கத்துக்குப் பெரிய சோதனை நாள். மாத்தளை, ரத்கமை, குருநாகல் முதலிய மூன்று தொகுதிகளிலும் நடைபெறும் பார்லிமெண்ட் இடைத் தேர்தலில் வெற்றிபெற அரசாங்கக் கட்சி பெரிதும் கவலையுடன் முனைந்துள்ளது. ஏனெனில் இந்த அரசாங்கத்தின் ஜாதகம் எப்படி என்பதை, இத் தேர்தல் முடிவு ஓரளவு காட்டிவிடும்.

லண்டனிலிருந்து அவசரமாகத் திரும்பிய பிரதமர் சிறிமா, சென்ற ஞாயிற்றுக்கிழமை மட்டும் மாத்தளைத் தொகுதியில் 16 கூட்டங்களில் பேசியிருக்கின்றார்! திங்களும், செவ்வாயும் ரத்கமை, குருநாகல் தொகுதிகள்.

முந்திய ஏற்பாட்டின் படி தேர்தல் கூட்டங்கள் திங்களுடன் முடிந்துவிட வேண்டும். ஆனால் செவ்வாயும் நடக்கலாமென பொலிசார் அறிவித்துள்ளனர். பிரதமரின் வசதியை முன்னிட்டே பழைய ஏற்பாட்டை மாற்றியிருப்பதாயும், இது ஒழுங்கீனமென்றும் மற்றக் கட்சிகள் ஆட்சேபித்துள்ளன.

பிரதமர்தானே அரசாங்கக் கட்சியின் உயிர்!

ஃ ஃ ஃ

மூன்று தொகுதிகளிலும் மொத்தம் 12 பேர் போட்டியிடுகிறார்கள். யு. என். பி. தொகுதியான மாத்தளையில் சுதந்திரக் கட்சி, யு. என். பி., ஐக்கியஇலங்கைக்கட்சி இவை மூன்றும், சுதந்திரக்கட்சித் தொகுதியான ரத்கமையில் சுதந்திர, யு. என். பி., கம்யூனிஸ்ட், எல். ஸ. பி. இந்நான்கும், குருநாகலில் சுதந்திர, யு. என். பி., ஜாதிக விமுக்தி பெரமுனை, இரு சுயேச்சைகளுமாக 5 பேரும் போட்டியிடுகிறார்கள்.

சுதந்திரக் கட்சிக்கும் யு என். பி. க்கும் தான் மூன்றிலும் பலத்த போட்டி. சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் லஞ்ச ஊழல் மலிந்துள்ளதாயும், அக் கட்சியைச் சேர்ந்த ஐந்துபேர்களே, விசாரணைக் கமிஷனால் லஞ்சக் குற்றவாளிகளென்று தீர்ப்பளிக்கப்பட்டதாகவும் டட்லி சேனநாயக்கா பிச்சு வாங்குகிறார்.

"டட்லி விவசாய மந்திரியாகவும், அவர் தகப்பனார் பிரதமராகவும் இருக்கையில், அவரது சகோதரர் ராபர்ட் சேனநாயக்காவின் டிராக்டர் கம்பெனிக்கு கல்லோயாவில் ஏகபோக உரிமை அளிக்கப்பட்டது. அதை நினைத்துப் பார்த்துக்கொண்டால் டட்லி அதிகம் பேச முடியாது" என்று சுதந்திரக்கட்சி பதில்கொடுக்கின்றது. ஈயத்தைக் கண்டு இளித்ததாம் பித்தளை!

ஃ ஃ ஃ

தேர்தல் முடிவுகள் எல்லாம் இன்று இரவுக்குள் வெளியாகிவிடும். நாளைக்கே பஸ் கட்டணங்கள் உயர்ந்துவிடுமென்றார் டட்லி. யாழ்ப்பாண அரிசி விநியோகம், சத்தியாக்கிரகம் இவை குறித்து அரசாங்கம் உச்சாணிக் கொம்பிலிருந்து சற்றே இறங்கி வந்து தீர்க்க முற்படலாமென்கிறார் மற்றோர் அரசியல்வாதி. என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

ஃ ஃ ஃ

மொழிக்காக மட்டும் நடந்து வந்த சத்தியாக்கிரகம் சில அதிகாரிகளின் முட்டாள் தனம் காரணமாக யாழ்ப்பாணத்தில் அரிசி சத்தியாக்கிரகமாகவும் வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்திற்கு வந்து அரிசி அனுமதிச் சீட்டுப் பெறும்படி கூட்டுறவு சமாஜங்களைக் கேட்டிருந்தார்கள். அங்கு தடையிருப்பதாக சமாஜங்கள் கூறின. தடை எதுவுமில்லை. என்று அரசாங்கம் கூறி, புதிதாக 7 பேருக்கு அரிசி விற்க அனுமதியளித்து, அரிசியும் கொடுத்துள்ளதாயும் அவர்கள் தம்மிடம்வந்து அனுமதிச்சீட்டு பெறுவதாயும், அக்கடைகளில் நள்ளிரவுவரை நீண்ட க்யூவில் மக்கள் நின்று அரிசி வாங்குவதாயும் கூறி, சத்தியாக்கிரகத் தலைவர்கள்தான் யாழ்ப்பாண மக்களுக்கு அரிசி ரேஷன் இல்லாதபடி செய்துள்ளதாயும் இடித்துக் காட்டுகிறது அரசாங்க அறிக்கை.

அதிபரின் வாசஸ்தல வாசலிலும் திங்கள் முதல் மறியல் ஆரம்பமாகிவிட்டதால், தடையிருப்பதை அரசாங்கம் இப்போதாவது மறுக்க முடியாது. கூட்டுறவு சமாஜங்கள் கூறியது உண்மையாகத் தெரிந்த பின்பாவது, அரசாங்கம் பிடிவாதத்தைத் தளர்த்தி, மனம் மாறி கூட்டுறவு சமாஜங்கள் மூலம் அரிசியை இங்கு மக்களுக்கு வழங்க ஒழுங்குசெய்ய வேண்டும்.

அரிசியை பொது மக்களுக்குத் தட்டாமல் கிடைக்கும்படி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்கத்தினுடையதேயன்றி, சத்தியாக்கிரகத் தலைவர்களுடையதன்று.

ஃ ஃ ஃ

அரசியல் சமரசப் பேச்சுக்கள் ரகசியமாக நடந்து வருவதாயும், ஆனால் இன்னும் சில வேற்றுமை இருப்பதாயும், இடைத் தேர்தல்கள் முடிந்ததும், சில நாட்களில் அரசியல் முட்டுக்கட்டை தளரக்கூடுமென்றும் விஷயமறிந்த ஒரு நண்பர் தெரிவிக்கின்றார்.

## "தளத்திற்கு இடங்கொடோம்"

கோலாலம்பூர், மார்ச் 28

லாவோஸில் யுத்தம் ஏற்படுமானால், மலாயாவை ஒரு தளமாக உபயோகிக்க அனுமதிக்க மாட்டோம் என மலாயா உதவிப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# வவனியாவில் உருகும் தார்ரோட்டில்

## நெஞ்சை நெகிழச் செய்யும் காட்சி

### சத்தியாக்கிரகிகளுக்கு தனிநாயக அடிகள் ஆசி

வவனியா, செவ்வாய்

தனிநாயக அடிகளார் நேற்றைய தினம் வவுனியாவுக்கு வருகை புரிந்து கச்சேரிமுன் நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கத்தைப் பார்வையிட்டார்.

அகோர வெய்யிலையும் பாராது உருகும் தார் ரோட்டில் சத்தியாக்கிரகிகள் அமைதியாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் தனிநாயக அடிகளாரின் கண்கள் கலங்கிவிட்டன.

'இந்தக் காட்சியை மனித உள்ளம் படைத்த யார்பார்த்தாலும் மனம் உருகாமல் இருக்கமுடியாது' என்று கூறிய அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. தனிநாயக அடிகளார் வவனியா எம். பியைச் சந்தித்து ஆசிகூறினர். எம். பியிடம் பணமுடிப்பொன்றையும் அடிகளார் வழங்கினர்.

வவனியா கிழக்கு மூலை வடக்கு கிராமச்சங்கத் தலைவர் தலைமையில் இன்று சத்தியாக்கிரகம் நடைபெறுகிறது.

சுமார் 1500 மக்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார்கள்.

கச்சேரி, காரியாதிகாரி கந்தோர் ஆகிய இடங்களில் அரசாங்கக் கருமங்கள் தொடர்ந்து ஸ்தம்பித்த நிலையிலிருந்து வருகின்றன. தார்ரோடு உருகும் அளவுக்கு உஷ்ணம் அதிக ரகவிருப்பதால் அதைத் தணிப்பதற்காக ட்ராக்டர்களில் தண்ணீர் கொண்டு வந்து தெருக்களில் ஊற்றப்படுகிறது.

இன்று அளம்பில் கிராமச் சங்கத் தலைவர், முல்லைத் தீவு பட்டின சபைத் தலைவர் ஆகியவர்களின் தலைமையில் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெறும்.

## ஜனசமூக அபிவிருத்தி வேலைகள்

கொழும்பு, திங்கள்

காலி மாவட்டத்தில் 5 நாள் ஜனசமூக அபிவிருத்தி வேலைகள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான வேலைகளில் 14 பாடசாலை மாணவர்கள் ஸ்தாபனம் பங்குபற்றிக்கொள்ளும். ஏப்ரல் 5 ம் திகதி இந்நிகழ்ச்சிகள் முடிவடையும்.

## லண்டனுக்குப் புதிய இந்திய கமிஷனர்

லண்டன். மார்ச் 27

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்குப் பின்னர் இந்திய ஹைகமிஷனராக இந்திய சட்ட மந்திரி ஸ்ரீ அசோக்குமார் சென் நியமிக்கப்படக்கூடுமெனத் தெரியவருகிறது. பிரதமர் நேருஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஸ்ரீ சென்னுக்கு இப்போது வயது 47.

## இலங்கையில் இந்தியகைத்தறி

சென்னை, மார்ச் 27

இந்தியக் கைத்தறி மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள இறக்குமதிக்கட்டுப்பாட்டைத் தளர்த்தும்படி வற்புறுத்துமாறு மத்திய அரசாங்கத்தைத சென்னை அரசாங்கம் கேட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## தேர்தலில் இ. போ. ச. ஒத்துழைப்பு

கொழும்பு, செவ்வாய்

ரத்கம, குருநாக்கல், மாத்தனை, ஆகிய உபதேர்தலில் உத்தியோகஸ்தர்களும் வாக்காளர்களும்தங்கள் கடமையை இடையூறின்றிக் கவனிக்கும் பொருட்டு இ. போ. ச. புதிய பஸ் போக்குவரத்துக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

## சென்னை வந்துள்ள இந்தோனேஷிய விமானிகள்

சென்னை, மார்ச் 27

தென்னிந்தியாவில் விமானப் பயிற்சி பெறும் பொருட்டு 150 இந்தோனேஷிய விமானிகள் சென்னை வந்துள்ளனர். ஏற்கெனவே இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 700 இந்தோனேஷிய விமானிகள் பயிற்சி பெற்று வருகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'பதவிக்காக கட்சி மாறமாட்டேன்'

—கல்முனை எம். பி.

காரைதீவு

'நாம் மதத்தால் முஸ்லிம்களானலும், இனத்தால் தமிழரே. அதற்காக நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கத் தயங்கக்கூடாது. மொழி உரிமைப் போராட்டத்திலிருந்து முஸ்லிம் மக்களைப் பிரிக்க முயல்வது வெட்கத்துக்குரியதொன்ருகும்.' இவ்வாறு கல்முனை எம். பி. ஜனப் எம். ஜி. அஹமத் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:–

'எந்த ஒரு நன்மைக்காகவோ, பதவிக்காகவோ நான் கட்சி விட்டு கட்சி மாறமாட்டேன். நமது தமிழ் மொழிக்குரிய இடத்தைப் பெறும்வரையும் போராடியே தீருவேன்' எனக் கூறினர். தொடர்ந்து ஜனப் அன்புமுகைதீன், ஜனப் ஏ. எம். முஸ்தபா ஆகியோரும்பேசினர். கூட்டத்துக்கு3000 முஸ்லிம் மக்கள் சமூகமளித்திருந்தனர்.

## ஏப்ரல் முதல் திகதி சுதேசி வாரம்

கொழும்பு, திங்கள்

வருகிற ஏப்ரல் 1ம் திகதி முதல் வருடாந்த சுதேசி வாரம் நாடெங்கும் கொண்டாடப்படும். உள்நாட்டுப் பொருள்களை உபயோகிக்க மக்களை உற்சாகப்படுத்துமுகமாகவும் உள்நாட்டுப் புடவைகளின் தரத்தை உயர்த்துமுகமாகவும் சுதேசிவாரம் கொண்டாடப்படுகிறது. சகல மாவட்டங்களிலும் பிரசாரங்களும், கலியாட்ட நிகழ்ச்சிகளும், உள்நாட்டு உற்பத்திப் பொருள் விற்பனைகளும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

## தாகூர் நினைவு நாள்

கெய்ரோ

மகாகவி தாகூரின் நினைவு விழாவைக் கொண்டாட ஐக்கிய அரபுக் குடியரசில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இத்தாலியிலும் தாகூர் நினைவு தினம் கொண்டாடப்படும்.

## ஜூன்மாதம் ஒரிஸா இடைத் தேர்தல்

புதுடில்லி, மார்ச் 27

ஒரிஸா ராஜ்யத்தில் வருகிற ஜூன் மாதம் ஆரம்பத்தில் சட்ட சபைக்கான இடைத் தேர்தல் ஆரம்பமாகுமென உள்நாட்டு மந்திரி திரு லால் பகதூர்சாஸ்திரி அறிவித்தும், இப்போது ஒரியாவில் ராஷ்டிரபதி ஆட்சி அமுலில் இருக்கிறது. அதை நீடிக்க அரசாங்கம் விரும்பவில்லையென ஸ்ரீ சாஸ்திரி குறிப்பிட்டார்.

## சிமெந்து இறக்குமதிக்கு ஏகபோக உரிமை

கொழும்பு,செவ்வாய்

வெளிநாடுகளிலிருந்து சிமெந்து இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமை இலங்கை சிமிந்தி கூட்டு ஸ்தாபனத்துக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கைத்தொழில், உள்நாட்டு, கலாச்சார அமைச்சர் திரு. மைத்திரிபாலாசேனநாயக்கா அரசாங்கத்துக்கு சிபார்சு செய்திருக்கிறது.

சிமெந்து விநியோகத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மேற்கொள்ளலாம் என்று திரு. மைத்திரிபால சேனநாயக்கா யோசனை கூறியுள்ளார்.

## சம்பளம் உயரும்போது வேலையும் அதிகரிக்கும்

களுத்துறை,மார்ச் 27

"ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும்போது, அவர்கள் அதிகமாக வேலை செய்ய வேண்டியுமிருக்கும்" என்று சம்பள நிர்ணயக் கமிஷன் தலைவர், திரு. வில்மட் ஏ. பெரேரா கூறினர். திரு. பெரேரா களுத்துறை ஞானோதய கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேசினர்.

"இப்போது ஆசிரியர்கள் 180 நாட்கள்தான் வேலை செய்கிருர்கள், இனிமேல் 200 நாட்கள் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் அதிக நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்பது சம்பளக் கமிஷன் சிபார்சுகளில் ஒன்று என்று கூறிய திரு. வில்மட் பெரேரா, சம்பளக் கமிஷன் அறிக்கை பூரணமாக வெளி வரும் வரை அமைதியுடன் இருக்கும்படி ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார்.

## இன்று 3 தொகுதிகளில் உப தேர்தல்

கொழும்பு, மார்ச் 29

ரத்கம, குருநாகல், மாத்தனை ஆகிய தொகுதிகளுக்கான உபதேர்தல் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது.

வாக்களிப்பு முடிந்ததும், ரத்கமவுக்குரிய வாக்குச் சீட்டுகள் காலிக் கச்சேரியிலும், குருநாகல் தொகுதி வாக்குச் சீட்டுகள், குருநாகல் கச்சேரியிலும், மாத்தனை வாக்குச் சீட்டுகள் மாத்தனைக் கச்சேரியிலும் எண்ணப்படும். இன்றிரவு 10 மணிக்கு முதல் தேர்தல் முடிவுகள் அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தேர்தல் கமிஷனர் டயஸ் அபயசிங்க கூறினர்.

மூன்று தொகுதிகளிலும் சுதந்திரக் கட்சியும், யு. என். பி. கட்சியும் போட்டியிடுகின்றன. கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும், எம். ஈ. பி. ஒரு தொகுதியிலும், ஜாதிக விமுக்தி பெரமுனை ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன. ஐக்கிய இலங்கையர் கட்சியும் ஒரு தொகுதியில் போட்டியிடுகிறது. குருநாகல் தொகுதியில் இரண்டு சுயேச்சைகளும் போட்டியிடுகின்றன.

## கலகக்காரர் ரயிலைக் கவிழ்த்தனர்

ரங்கூன்—மாண்டலே ரயில் பாதையில், ஞாயிறு இரவில் ஒரு ரயிலை கரேன் கலகக்காரர் வெடி வைத்துக் கவிழ்த்ததில் 40 பேர் கொல்லப்பட்டதாயும் 30 பேர் தூக்கிச் செல்லப்பட்டதாகவும் தெரிகிறது. முதல் நாளன்று நடந்த ரயில் விபத்தில் 8 பேர் மாண்டனர்.

# லாவோஸ் நெருக்கடியை

## சமாதானமாக தீர்க்கலாம்

### சோவியத் மந்திரி நம்பிக்கை

நியுயோர்க்; மார். 28

அமெரிக்க அதிபர் கெனடியும், சோவியத் வெளிநாட்டு மந்திரி குரோமிக்கோவும் நேற்று சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் லாவோஸ் நெருக்கடிபற்றி ஆலோசனை நடத்திஞர்கள்.

குரோமிக்கோ அதிபர் கெனடியுடன் ஆலோசனை நடத்தியபின் பத்திரிகை நிருபர்களுடன் பேசுகையில் லாவோஸ் நெருக்கடிக்கு சமாதான முறையில் பரிகாரம் தேடமுடியும் என்று அதிபர் கெனடியும் தாமும் நம்புவதாகத் தெரிவித்தார். லாவோஸ் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பிரிட்டன் தெரிவித்த யோசனைகள்பற்றி ரஷ்யா இன்னும் பரிசீலனை செய்துவருவதாகக் குரோமிக்கோ கூறினர்.

"லாவோஸில் நேசநாடுகளின் தலையீடு ஒழியவேண்டும், இளவரசர் சுவர்ண்ப்பூமாவை அங்கீகரித்தாக வேண்டும். இந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் ரஷ்யா பிரிட்டனின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளும்" என்று பிராவ்டா தெரிவித்திருந்தது.

பிரிட்டிஷ் யோசனைகளை ரஷ்யா பொதுவாக ஏற்றுக் கொண்டுவிட்டது என்ற உத்தியோகப்பற்றற்ற செய்திகள் கூறின.

### இந்திய ஸ்தானிகர் குருஷேவ் சந்திப்பு

நேற்று மாஸ்கோவில் இந்திய ஸ்தானிகர் கே. பி. எஸ். மேனன் பிரதமர் குருஷேவைச் சந்தித்து பேசிக்கொண்டிருந்தார். சுமார் ஒருமணி நேரம் அவர்கள் பேசினர்கள். லாவோஸ் நிலைமை குறித்து இந்தியா கொண்டிருக்கும் கருத்துக்களை மேனன் குருஷேவுக்கு விளக்கிக் கூறியதாக அறியப்படுகிறது.

## தொண்டமான் பிரதமரை சந்திப்பார்

கொழும்பு, செவ்வாய்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சி ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தமாக இ. தொ. காங்கிரஸ் தலைவர்களிலொருவரும் நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் இந்தவார இறுதியில் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசுவார்.

இ. தொ. கா. வின் காரியக் குழு சமீபத்தில் கூடி சத்தியாக்கிரக இயக்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் ஆராய்ந்தது. திரு. தொண்டமான் பிரதமருடன் பேச வேண்டுமென்று அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.


# ஹான்ட்லூம்ஸ்

(இந்திய அரசாங்கம்)

7, செட்டியார் தெரு, கொழும்பு 11.

## புதுவருடக் கொண்டாட்டத்துக்கு

புதுரக ஆடையணிகளோ,
ஜோடனைத் துணிமணிகளோ
உங்களுக்குத் தேவையா?

பல்வேறு ரகங்களில் எம்மிடமுள்ள அற்புதமான சேலைகள், ஷேர்ட் துணிகள், சாரங்கள், வேட்டிகள், கம்பளங்கள் திரைச்சேலைகள், வீட்டுப்பாவனைத் துணிமணிகள், ஆடையணிகளுக்கான ஜவுளி ரகங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, உங்களுக்குத் தேவைப்படுவதைத் தெரிந்தெடுங்கள்.

மிகக்குறைந்த விலையில் மிகச்சிறந்த பொருட்கள்

மேற் குறித்த ரகத் துணிமணிகள் யாவும், யாழ்ப்பாணம், மெயின் வீதி, அன்னை கட்டிடத்திலுள்ள ஹான்ட்லூம்ஸ் கிளையிலும் கிடைக்கும்.

## வரி விளம்பரம்

**உங்கள் நோய்**

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல நோய்களுக்கும் கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 58 யாழ்ப்பாணம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள் காலை 7, பகல் 12. 45, மாலை 6, இரவு 9,

**புதன் 29-3-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல் 8-15 இஸ்லாமிய கீதங்கள், பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள்,* 5-15 இளைஞர் மன்றம்* 5-45 திரை இசை* 6-15 கிராமசஞ்சிகை' 6-45 வீணை, 7-00 நேயர்விருப்பம், 8-00 இரஞ்சிதம் ஐயாத்துரை -பாட்டு, 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 இஸ்லாமிய, நிகழ்ச்சி 10-00 கான மஞ்சரி

* செங்கடக உப நிலையத்தில் அஞ்சல்.

## 'மகாநாடு கூட்டுக'

### கணக்கப்பிள்ளைகள் சங்கம் கோரிக்கை

நாவலப்பிட்டி, மார்ச் 28

மொழிப்பிரச்னை, இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமைப் பிரச்னை என்பனவற்றிற்கு உடனடியாக தீர்வு காண வட்டமேசை மகாநாடொன்றை கூட்டும்படி பிரதமரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இலங்கை பிளான்டேஷன் கணக்கப்பிளளைகள் யூனியன் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. எல். எம். கருப்பையா தலைமை வகித்தார். இச்சங்க தொழில் நல்லுறவு அதிகாரி திரு. எம். ஜெயராம் பொது காரியதரிசி திரு. எஸ் நாராயண சாமி, பொக்கிஷதார் திரு. திருமலை ஆகியோரும் இக்கூட்டத்தில் பேசினர்.

## "விசேஷ பிரார்த்தனைகள் செய்வீர்"

நாவலப்பிட்டி மார்ச் 28

சத்தியாக்கிரக இயக்கம் வெற்றி பெற நாம் அனைவரும் விசேஷ பிரார்த்தனைகள் செய்ய வேண்டும் என்று திரு. தொண்டமான் கூறினார்.

அல்கடுவாவில் புதிதாகக் கட்டப்பட்ட ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தைத் திரு. தொண்டமான் திறந்து வைத்துப் பேசியதாவது:

தொழிலாளர் தெய்வ வழிபாட்டை வாழ்க்கையில் முக்கிய கடமையாக கருதவேண்டும். கோவில்களை கட்டிவிட்டால் போதாது. அவற்றை நமது வாழ்க்கையின் இலட்சிம் ஈடேற பயன் படுத்த வேண்டும். பரம்பரையாக கோவில்களை கட்டி விழா எடுத்து வந்த பெருமை தமிழனுக்குண்டு. பிரார்த்தனை செய்து வருவதால் மக்களின் மனம் பண்படும். சமீபகாலமாக நடைபெற்று வரும் சத்தியாக்கிரக போராட்டத்தின் மூலம் மொழிப் பிரச்னை தீர்ந்து சிறு பான்மையினரின் உரிமைகள் கிடைக்கும் வண்ணம் நாம் அனைவரும் விசேஷ பிரார்த்தனைகள் செய்ய வேண்டும்.

# "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்"

## சர்வகட்சி கூட்டத்தில் இராஜதுரை எம்.பி.

காத்தான்குடி, மார். 28

"இனிவரும் நாட்கள் சோதனை மிகுந்தவைகளாக இருக்கலாம். எனவே, தமிழ்பேசும் மக்கள் எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாக இருக்கவேண்டும்" என்று மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரை மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தமிழ் உரிமைக்காக நடைபெறும் போராட்டத்தில் ஒற்றுமையுடன் ஆதரவு அளிக்கும்படி திரு. இராசதுரை தமிழ்ப்பேசும் மக்களைக் கேட்டுக்கொண்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: "அநீதி என்றும் நிலைத்ததில்லை. நீதி அழிந்ததில்லை. இது சரித்திரங்கண்ட உண்மை. எண்ணிக்கையில் கூடிய துரியோதனனதியோரின் வளமை, நீதியும், நேர்மையும்மிக்க தருமரின்முன் தோல்வியடைய நேர்ந்ததை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும். பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்ற சிங்கள மக்கள் தம் நாடு, மொழி ஆகியவற்றைப் பாதுகாக்க முயல்வதுபோல் தமிழர் தம்நாட்டையும், மொழியையும் பாதுகாக்க முயல்வது தவரு என்று கேட்க விரும்புகிறேன். அரசியல் சட்டம்தான் எங்களின் எதிரியாக விருக்கிறது. சிங்கள மக்கள் எங்களின் சகோதரர்களாவர்.

### அதிர்ச்சியுற்ருேம்

பட்டிருப்பு எம். பி.யும், தமிழரசுக்கட்சியின் தலைவருமான திரு. இராசமாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:-

பிரதமர் லண்டனில்இருந்து திரும்பியதும், சுமுகமான ஒரு முடிவு ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனல் இங்கு வந்ததும் வெளியிட்ட கருத்து எம்மை அதிர்ச்சியுறச் செய்தது. "அரசாங்கமும், சிங்கள மக்களும் பொறுமையுடன் இருந்தார்கள்" என்று அவர் வானொலி மூலம் கூறியது எவ்வளவு அபாயகரமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தம் கணவரின் கொள்கையை நிலைநாட்டப்போவதாகக் கூறிய பிரதமருடன் பலதடவை பேசிப்பார்த்தோம். ஆனல் ஏமாற்றம்தான் அடைந்தோம். அதன்பின்புதான் சத்தியாக்கிரக இயக்கத்தில் இறங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

### முஸ்லிம்களின் கடமை

நிந்தாவூர் சுயேச்சை எம். பி. ஜனப் எம். ஐ. அப்துல் மஜீது பேசுகையில், "மதத்தால் வேறுபட்டாலும், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மொழியால் ஒன்றுபட்டவர். அந்த மொழிக்குரிய உரிமைக்காகப் பாடுபடவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்" என்ருர்.

கல்முனை எம். பி. ஜனப் எம். ஜி. அகமது பேசியதாவது:- "செல்வாக்கிழந்த சில தலைவர்கள், தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரித்துவிட்டு அரசாங்கத்திடம் அற்பசலுகைகள் பெற முயற்சிக்கிருர்கள். அவர்களைப்பற்றி மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்."

## மொழிப் பிரச்சினைக்கு முடிவு காண்க

### பட்டினசங்கத் தீர்மானம்

சங்கானை, மார்ச் 28

"தமிழ்மக்கள்நடத்தும் இன்றையமொழி உரிமைப்போராட்டத்தை, அரசாங்கம் ஏதோ கேலிக் கூத்தாக மதித்து அக்கறை காட்டாதிருப்பது மிகவும் வ்சனத்துக்குரிய செயலாகும். இந்த மனேபாவம் இந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு குந்தகம் விளைவிப்பதுடன் நின்றுவிடாது நாட்டின் சுதந்திரத்திற்கே ஆபத்து விளைவிக்கக் கூடியதுமாகும்." இவ்வாறு சங்கானைப் பட்டினசங்க மாதாந்தக் கூட்டமொன்றில் 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. வயிரமுத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசாங்கம் உடனடியாக தமிழரசுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பித்து மொழிப் பிரச்சினையில் ஓர் சுமுகமான முடிவுக்கு வரவேண்டுமென்னும் தீர்மானம் சபையாரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## வேகமாக ஓடிய ஜீப்புக்குத் தடை

### மன்னிப்புக் கேட்டனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நிற்பாட்டுங்கள், போகமுடியாது" இவ்வாறு திரு. வி. ஏ. கந்தையா எம். பி. பழைய பூங்காவின் பிரதான வாசலில் உள்ளே போக வந்த அரசாங்க அதிபர் காரியாலய சிப்பந்திகள் வந்த2ஸ்ரீ8671 ஜீப் வண்டிக்கு முன் நின்று தடுத்தார்.

பழைய பூங்கா வாசலில் இப்பொழுது மறியல் நடைபெற்று வந்த போதிலும் அரசாங்க அதிபரின் வேலையாட்களையும்பொலிஸ்காரர்இராணுவத்தினர் இவர்களையும் உள்ளே அனுமதித்தே மறியல் நடைபெற்று வருகிறது. சத்தியாக்கிரகிகளை மருவினுற்போல் கடுகதியாக அவ்வாசலில் ஓட்டிச் செல்வதில் மேற்குறிப்பிட்ட இலக்கத்தையுடைய ஜீப் வண்டி பன்முறை இவர்களது கவனத்துக்குட்பட்டதைத் தொடர்ந்து நேற்று இரவு மேற்படி வாசலில் வாகனங்களைப் பரிசோதித்து உள்ளே அனுமதித்து வரும் திரு. கந்தையா அவ்வாறு செய்தார். "இவ்வாறு தொடர்ந்து கண்மூடித்தனமான நடவடிக்கை இருக்குமானல் இவ்வாசலிலும் பூரண மறியலை நடத்துவோம் எச்சரிக்கையாக இருங்கள்" என்று அவர் மேலும் அவர்களிடம் கண்டிப்பான தொனியில் கூறவே, அந்த ஜீப் வண்டியில் வந்தவர்கள் மன்னிப்புக் கோரிக் கொண்டனர்.

முன்பு அவ்வண்டியை வேறு யாராவது ஓட்டியிருக்கலாமென்றும் தாங்கள் அப்படி வேகமாக ஓட்டவில்லையென்றும் சமாதானம் கூறினர், அந்த ஜீப்பில் வந்தவர்கள்.

## அனுராதபுரத்தில் சமசமாஜ விழா

யாழ்ப்பாணம் 29

இலங்கை சமசாஜக் கட்சி வாலிபர்கள் ஏப்பிரல் 1, 2, திகதிகளில் அனுராதபுரத்தில் மகாநாடு ஒன்று நடத்த தீர்மானித்துள்ளனர்.

1ம் திகதி இரு மைல் தூரத்துக்கு காடுகளை வெட்டி புதிய பாதை அமைக்கப்போவதாக அவர்களின் அறிக்கை கூறுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்தும் சமசமாஜ வாலிபர்கள் இம் மகாநாட்டில் கலந்துகொள்வர். மிகுந்தலை எம். பி. திரு. தென்னக்கோன் இவர்களை வரவேற்பர்.

## கல்லூரி தினம் பின்போடப்பட்டது

முள்ளியவளை,

வித்தியானந்த கல்லூரி தினம் சென்ற திங்கட்கிழமை நடைபெறுவதாக இருந்தது. மாணவர்கள் எவரேனும் தொடர்ந்து வராமையில் பாடசாலை தினம் பின் போடப்பட்டுள்ளது,

## காஞமந்திரியின் யோசனை

காங்கோ பார்லிமென்டை இரண்டு வாரத்துக்குள் கூட்ட வேண்டும், இல்லையென்ருல் அங்கு பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்று காஞ வெளி நாட்டு மந்திரி ஐ. நா. வைக்கேட்டிருக்கிருர்.

## உடுப்பிட்டியில் துக்கம்

உடுப்பிட்டி, செவ்வாய்

திரு. ஏகாம்பரம் எவ்வித அரசியல் கருத்துடன் வாழ்ந்தாலும் அவர் பண்பு மிக்கவர் அத்துடன் கர்மவீரனுகவும் வாழ்ந்து வந்தார். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற விரும்பும் இளைஞர் கட்டுப்பாட்டுடனும், ஒழுங்குடன் நடப்பதே அவரது ஆத்மாவுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் இவ்வாறு கரவெட்டி விநாயகர் வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. எம். சுப்பிரமணியம் நேற்று பாடசாலைக் கூட்டத்தில் திரு. ஏகாம்பரம் எம். பியின் பிரிவு குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

# சத்தியாக்கிரகத்துக்கு தி.மு.க. பூரண ஆதரவு

புசல்லாவை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சியினர் நடத்திவரும் சத்தியாக்கிரகம் வெற்றிபெற ஆவன செய்ய வேண்டுமென்ற தீர்மானம் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பெற்றது. பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் தலைமை வகித்தார்.

பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.

2000 தொண்டர்களை இந்நாடு முழுவதும் திரட்டி ஒவ்வொரு வாரமும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னர், திருக்கோணமலை, வவனியா மற்றும் தமிழரசுக் கட்சியினர் போராட்டம் நடத்த தீர்மானிக்கும் பிற இடங்களுக்கும் அனுப்புதல். அறப்போர் வெற்றி பெற தமிழரசுக் கட்சியினருக்கு மேலும் தொண்டர்கள் தேவைப்பட்டால் பத்தாயிரம் தொண்டர்களை மலைநாட்டில் திரட்டியனுப்ப உரிமைப் போராட்ட குழுவுக்கு இப் பொதுக் குழு பூரண அதிகார வழங்குகிறது.

## முன்னாள் பிரதம நீதியரசர் காலமானர்

லண்டன், மார்ச் 28

இலங்கையின் முன்னுள் பிரதம நீதியரசர் வி. எல். செனிவிரத்னாவினின் ... கிளயார் வொன் கடந்த சனிக்கிழமை தமது 67 வது வயதிற் காலமானர்.

## ஹரிஜனங்களுக்கு இலவச காணி

புதுடில்லி

ஆந்திரப் பிரதேச அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு இலவசமாக காணிகள் வழங்க முடிவு செய்திருக்கின்றது.

## மத்திய மாகாண சைவமகாசபை

நாவலப்பிட்டி

மத்தியமாகாண சைவ மகா சபையின் புதுவருட நிர்வாகிகளாகப் பின். வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். ஐயாத்துரை, இணைக்காரியதரிசிகள்: திரு. சி. செ. இலங்கையர், திரு. கே. ஜீவரத்தினம் பொக்கிஷதார் திரு. எம். தங்கவேலு, கமிட்டி அங்கத்தினர்: திருவாளர்கள், எஸ். விஸ்வநாதர், கே. நடராஜா, ஏ. செல்லையா, கே. தியாகராஜா, ஈ. கந்தசாமி, பி. சின்னையா, என். அமிர்தலிங்கம், எஸ். இராஜநாயகம், டி. கனகரத்தினம், ஏ. கணேசன், எஸ். முருகேசு. எஸ். இராமநாதன்.

## புதிய தொழில் கமிஷனர்

கொழும்பு, செவ்வாய்

திரு. லிங்கன் அபயவீர என்பவர் தொழில் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிருர். தொழில் கமிஷனர் பதவிக்கு விண்ணப்பம் செய்திருந்த நான்கு உதவி தொழில் கமிஷனர்களில் இவர்தான் வயதிற் குறைந்தவர்.

**குறைந்த விலையில்**

ஆஸ்திரேலியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
சிறந்த

**முட்டைகள்**

மொத்தமாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**கே. பரமானந்தன்**
76, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# முறியடிக்கும் திட்டத்தில் ஒருபகுதியா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் நேற்று மீண்டும் மறியல் ஆரம்பிக்கப்பட்டது. இராணுவத்தினர், பொலிஸ் 'ஜீப்' வண்டிகள், ட்ரக்குகள், அரசாங்க அதிபரின் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் எவ்வித வசதிக்குறைவுமில்லாமல் போக்குவரத்து செய்யக் கூடியதாக வழிவிட்டுக் கொடுத்தபடி வாசலின் இருமருங்கிலும் சத்தியாக்கிரகிகள் அமர்ந்து மறியல் செய்தனர்.

எவ்வித சம்பவமுமின்றி பகல் கழிந்தது. இரவு 9 மணிக்குச் சற்றுப்பின்னர், அரசாங்க அதிபரின் இல்லத்தைச் சேர்ந்த, சுமார் ஆறு அல்லது ஏழு சிங்கள சில்லறைச் சிப்பந்திகளோ தொழிலாளர்களோ, (அவர்கள் அரசாங்க ஊழியர் என்று நினைக்கிறேன்) கூட்டமாக வந்து, வாசலிலுள்ள இரு தூண்களுக்கும், இருமருங்கிலுமுள்ள சத்தியாக்கிரகிகளுக்கும் மத்தியில் 'பழைய பூங்கா'வுக்குள்ளும் வெளியேயும் செல்லும் வாகனங்களைத் தடைசெய்தபடி அமர்ந்து கொண்டனர். இவர்களில் ஒருவர் துப்பாக்கி முனையில் இருக்கும் குத்துவாள் வைத்திருந்தார். மற்றொருவர் 'ஸ்குறூட்றைவர்' வைத்திருந்தார்.

### அதிகாரிகள் முயற்சி பலிக்கவில்லை

அங்கிருந்து அவர்களை எழுந்து செல்லும்படி செய்ய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இதேபோல் கச்சேரியில் வேலைபார்ப்பதற்காக வந்து உள்ளே தங்கியிருக்கும் கச்சேரியின் இதர உத்தியோகத்தர் எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. 'கல்லெறிவோம்' என்று அவர்கள் பயமுறுத்தியதால் பத்திரிகைப் புகைப்படப்பிடிப்பாளரும் இதர புகைப் படப்பிடிப்பாளரும் அக்காட்சியைப் படம்பிடிக்க முடியாது போய்விட்டது. உண்மையில் ஒரு படப்பிடிப்பாளர் தம்மை நோக்கிவந்த கல் தன்மீதுவிழாமல் மயிரிழையில் தப்பிக்கொண்டார்.

இன்று அதிகாலை ஒரு மணிக்கு கச்சேரி உத்தியோகத்தர்களில் ஒருவர் வெளியே சென்று ஒரு பௌத்தபிக்குவுடன் திரும்பிவந்தார். அவர்கள் முன் சுமார் ஒன்றரை மணி நேரம் உபதேசம் செய்தார்.

இதன்பின் பிக்கு முன்னால் செல்ல, அவர்கள் எல்லோரும் எழுந்து அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்குச்சென்றனர். பதில் அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா விஜயரத்ன இப்பொழுது யாழ்ப்பாணத்தில் இல்லை.

10 இச்சம்பவம் சத்தியாக்கிரகிகளின் வலிமைக்கு ஏற்பட்ட ஒரு சோதனை. இச்சோதனையில் சத்தியாக்கிரகிகள் பெரும் வெற்றிபெற்றது மட்டுமல்ல சத்தியாக்கிரகத்தின் உண்மையான பலத்தையும் அவர்கள் கொண்டிருக்கின்றனரென்பதையும் அவர்கள் நிரூபித்து விட்டதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். பெரும் ஆத்திரமூட்டக்கூடிய சந்தர்ப்பத்திலும் அமைதியையும் அடக்கத்தையும் கடைப்பிடித்து அஹிம்சை எவ்வளவு சக்திவாய்ந்த ஆயுதம் என்பதை சத்தியாக்கிரகிகள் நிரூபித்து விட்டனர்.

### முறியடிக்கும் திட்டமா?

இந்தச்சம்பவம், சத்தியாக்கிரக இயக்கத்தை முறியடிக்கும் திட்டத்தில் ஒரு பகுதியா? இல்லையா என்பது நான் சொல்லவேண்டிய விஷயமல்ல. ஆனால், 'மிக அபாயகரமான' நிலைமை ஏற்படக்கூடியதான ஒரு சம்பவத்தை சத்தியாக்கிரகிகள் தவிர்த்துக்கொண்டனரென்பதில் தடையேதுமில்லை.

இச்சம்பவத்தைதந்திரமாகச் சமாளிக்க உதவிய சிரேஷ்ட உத்தியோகத்தர்களையும் பொதுமக்களையும் பாராட்ட வேண்டும்.

## கைப்பந்தாட்டப் போட்டி

### றேஞ்சேர்ஸ் வீரராகத் தெரிவு

உடுப்பிட்டி, செவ்வாய்

அல்வாய் மேற்கு கோல்டின் ஸ்ராஸ் விளையாட்டு கழகக் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி சாம்பியன் தெரிவுப் போட்டி அல்வாயில், இமையாணன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், றேஞ்சேஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்டைவேலிக் கிராமச்சங்கத் தலைவர் திரு. ஆர். சச்சிதானந்தம் தலைமை தாங்கினார். வீரராக வேற்றி ஈட்டிய றேஞ்சேஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னோல்ட் ஸ்ரீ கோபாலன் வெற்றிக் கேடயத்தை வழங்கினார்.

## சுயதேவைப் பூர்த்திக்கு தொழில் விருத்தி அவசியம்

கோப்பாய், மார்ச் 29

"எமக்கு ஏற்பட்டிருக்கும் இன்றைய அரசியல் சூழ் நிலையில் உணவு, உடை ஆகியவற்றில் எமது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டியது அவசியமாகும்" என்று கோப்பாய் மாவட்ட பரிபாலன சபை ஆலோசனை அங்கத்தவரான திருமதி வேதவல்லி கந்தையா, நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இளைஞர் விவசாயக் கழக ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

கமத்தொழில், கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர் முதலீடுகளில்லாமல் தொழில் விருத்தி செய்யமுடியாதிருக்கின்றனர் இவர்களுக்கு போதிய உதவி செய்ய அரசாங்கம் முன்வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. கே. சின்னையா பேசியதாவது:-

இளைஞர்களிடையே ஆரம்பத்தில் இருக்கும் உற்சாகம் காலக்கிரமத்தில் அற்றுப் போவதால் தமது நோக்கத்தையடைய முடியாதுபோய் விடுகின்றது. அவர்கள் எத்துறையிலும் விடாமுயற்சியோடு உழைக்கவேண்டும். திரு. கி. இராசா தலைமைவகித்தார்.

---

பிரதம மந்திரி திரு. நேரு இன்று பிற்பகல் ரூர்கலா எஃகு ஆலையின் உற்பத்தியை ஒரு மின்சார பொத்தானை அமுக்கி இயக்கிவைத்தார்.

## இந்தியச் செய்திகள்

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவுக்கு 2700 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி தேவைப்படுமென்றும், திட்டம் இன்னும் ஒரு மாதத்தில் இறுதியாகத் தயாராகு மென்றும் லோக சபையில் நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அறிவித்தார்.

10 ஆண்டுகளுக்குமேல் சிறையிலிருக்கும் கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்யுமாறு கோரி, தமிழ்நாடு சட்டசபைக்குமுன் 300 கம்யூனிஸ்டுகள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் வருகிற வியாழக்கிழமையும், பிரெஞ்சு வெளிநாட்டுமந்திரி வருகிற சனிக்கிழமையும் புதுடில்லி வந்து ஸ்ரீநேருவுடன்லாவோஸ்பற்றிச் சம்பாஷணை நடத்துவார்கள்.

### கென்னடிக்கு டிகால் கடிதம்

பாரிஸ், மார்ச் 28

லாவோஸ் சம்பந்தமாக பிரெஞ்சு ஜனாதிபதி டிகால், அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளதாயும், பிரிட்டனின் யோசனைகளைப் போலவே பெரும்பாலும் பிரான்ஸின் கருத்தும் கடிதத்தில் பிரதிபலிப்பதாயும் தெரிகிறது.

### இலங்கைக்கு 3 கோடி கடன்

கொழும்பு செவ்வாய்

இலங்கையில் தொலைபேசித் தொடர்பை விஸ்தரிக்கு முகமாக பிரிட்டன் 3 கோடி ரூபாய் கடன் அளித்துள்ளது.


ரசிகர்களை மகிழ்விக்க

திரும்பவும் காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனுல் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.

ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.

........எனவே

பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.........

ஆனல் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்......

ஏன்?

எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?

பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......

புதுமை விரும்பிகள்

எம். ஜி. ராமச்சந்திரன்

பி. வி. நரசிம்மபாரதி,

பி. எஸ். கோவிந்தன்

ஈ. வி. சரோஜா

மாதுரிதேவி, வி. சுசீலா

நடித்த



அசோகா பிக்சர்ஸ்

என் தங்கை

டைரக்ஷன்: CH.நாராயணமூர்த்தி & M.K.R.நம்பியார்

கதை,வசனம்: வில்லன்: T.S.நடராஜன் ஸ்டுடியோ: நியூடோன்

அசோகா பிக்சர்ஸ், 18. லஸ் அவன்யூ, மதராஸ்.4

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

சியாமளா

தியாகராஜபாகவதர் எஸ். வரலட்சுமி நடித்தது.

மாலை 6-30 இரவு 9-30

சனி, ஞாயிறு 2-30 மெற்னி

# செய்தி ஒலிபரப்பில் கட்சி பாகுபாடு கிடையாது

## லோக சபையில் கேஸ்கர் மறுப்பு

புதுடில்லி மார்ச் 28

அரசியல் கருத்துக்களை ஒலிபரப்புவதில் அகில இந்திய ரேடியோ ஒரு கட்சி சார்பாக இருக்கிறது என்ற எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டை லோக சபையில் செய்தி ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் மறுத்தார்.

அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் செய்தி முக்கியத்துவ அடிப்படையில் தகுந்தபடி இடம் பெறுவதாகவும் தமது இலாகாவுக்கான மான்ய விவாதத்தின்போது அவர் கூறினர்.

பிரதேசமொழி செய்திப் பத்திரிகைகளுக்கும் சிறிய செய்திப் பத்திரிகைகளுக்கும் ஆதரவளிக்கும் நோக்கத்தில் அவைகளுக்கு அதிக விளம்பரம் கொடுப்பது அரசாங்கத்தின் கொள்கை என்றும் ஆபாச சினிமா விளம்பரப் போஸ்டர்களைக் கட்டுப்படுத்த மசோதா தயாராகி வருவதாகவும் டாக்டர் கேஸ்கர் கூறினர்.

இந்தியப் பத்திரிகைகள் ஏகபோக ஆதிக்கம் ஏற்படுகிறது என்று குறை கூறப்படுவதைப் பிரஸ்தாபித்து நிலைமையைச் சர்க்கார் கவனித்து வருகிறது என்றும், ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் யோசனைப்படி செய்திப் பத்திரிகைத் தொடர்களை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்க வேண்டிய அளவுக்கு நிலைமை மோசமாக இல்லை என்றும் கூறினர்.

தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்கு பிரச்சார சாதனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும் பள்ளிக்கூட உபயோகத்திற்காக தேசியப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள் அடங்கிய ஒரு புத்தகத்தை இந்த இலாகா பிரசுரிக்க வேண்டுமென்றும் அங்கத்தினர்கள் கூறினர்கள். ரூ. 13.48 கோடி மான்யம் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

## கொட்டும் மழையிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கே. ஜெயக்கொடி தலைமையில் மறியல் செய்கிருர்கள்.

### கால்விரல் நெரிந்தது

கச்சேரியின் 'பழையபூங்கா' வாசலில் மறியல் செய்து கொண்டிருந்த தொண்டர்களில் ஒருவருடைய கால்விரல் ஒன்றைக் கச்சேரிக்குத் தண்ணீர் கொண்டு சென்ற லொறியொன்று நெரித்துவிட்டது.

இதைத் தொடர்ந்து வாசல் முழுவதையும் தொண்டர்கள் மறியல் செய்தனர். உதவி அரசாங்க அதிபர் தலைவர்களைச் சந்தித்து இதுபோன்ற சம்பவம் இனி நிகழாமல் பார்த்துக் கொள்வதாகக் கூறினர். பின்னர் வாகனப் போக்குவரத்துக்கு வழிவிட்டுக் கொடுக்கக் கூடிய முறையில் மறியல் தொடர்ந்து நடைபெற்றது.

ஆனல் வாகனங்கள் யாவும் வாசலில் தடுத்து நிறுத்தப்பட்டு மெதுவாகவே செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

சுன்னுகம் வள்ளுவர் குலத்தார் நேற்று இங்கு மறியல் செய்யும் தொண்டர்களுக்கு 1000 உணவுப் பார்சல்கள் கொடுத்தனர்.

## காங்கேசன்துறை சத்தியாக்கிரகம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை விளையாட்டு மைதானக் காரியாலயத்தின் முன்பாக மூன்ருவது தினமாகச் சத்தியாக்கிரகம் அமைதியாக நடைபெற்றது. திருமதி வில்வி ஜீப் பிலிப்ஸ் தலைமையில் தொண்டர்கள் மறியல் செய்தனர்.

காங்கேசன்துறை விற்பனை இலாகாக் கிளைக்காரியாலயத்தின் முன்பாக இரண்டாவது தினமாக திருமதி ஏரம்பமூர்த்தி தலைமையில் பெண்களும் திரு. தெட்சணமூர்த்தி தலைமையில் ஆண்களும் சத்தியாக்கிரகம் செய்தனர். நேற்றுக்காலை 11 மணிக்கு திரு. எம். குமாரசுவாமி என்பவர் லொறியில் தேங்காய்கள் பறிக்க வந்ததோடு அரிசியை எடுத்துச்செல்லவும் வந்தார். இதனையறிந்த சத்தியாக்கிரகிகள் லொறியைஉள்ளேவிடாது மறித்துநின்றனர். கடைசியாக சத்தியாக்கிரகிகள் முன் தேங்காய் பறிக்கப்பட்டது. பின்பு லொறித்தொழிலாளர்கள் தேங்காய்களை உள்ளே கொண்டு சென்றனர். இச்சத்தியாக்கிரகம் காரணமாக ஆஸ்பத்திரி உணவு விநியோகம் தடைப்படவில்லை.

## ஆசிரியர்கள் பணமுடிப்பு

மன்னர், செவ்வாய்

மன்னர் ஆசிரியர் கள்சமீபத்தில் மன்னர்கச்சேரிக்குஊர்வலமாகச் சென்று அங்கு நடைபெற்றுவரும் மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டதுடன் ஒரு பணமுடிப்பையும் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையிடம் கொடுத்தனர்.

## பிரதமருக்கு மகஜர்

காங்கேசன் துறையைச் சேர்ந்த மாதர்கள் சிலர் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்காவுக்கு அனுப்ப மகஜர் ஒன்றினைத் தயாரித்து வருகின்றனர். இம்மகஜர் சுமார் 5000பேரின் கையொப்பத்துடன் அனுப்பப்படும் என்று தெரிகிறது.

## மாநகரசபை அங்கத்தவர் காருக்கு கல் வீச்சு

யாழப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் 13 வட்டார அங்கத்தவர் ஹாஜி. வி. எம். எம். அபுசாலியின் கார்மீது சென்ற இரவு கச்சேரியின் உள்ளிருந்து கற்கள் எறியப்பட்டதாயும், இது சம்பந்தமாக அவர் பொலிஸில் புகார் செய்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## அரிசி விநியோகம் சாத்தியப்படவில்லை

யாழ்ப்பாணம் புதன்

நாவந்துறையைச் சேர்ந்த யோஸப் மரியதாஸ் என்பவர் குறித்த வட்டாரத்துக்கு அரிசிப் பங்கீட்டு விநியோகஸ்தராக அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனல் பொது மக்களின் மறியல் காரணமாகத் தன்னல் அரிசியை விநியோகிக்கச் சாத்தியமில்லை எனக் கூறி அவர் தமது பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதாக அரசாங்க அதிபருக்குத் தெரிவித்துள்ளார்.

## கரவெட்டியில் "பூதத்தம்பி" நாடகம்

உடுப்பிட்டி,

மேனட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வீரத்தமிழன் "பூதத் தம்பியின் வரலாறு, நேற்றுகனுவில் சிறுபான்மைத் தமிழரால் நாட்டுக் கூத்தாக நடித்துக் காண்பிக்கப்பட்டது.

# 1961-க்குள் கோவா விடுதலைக்கு தீவிரமான நடவடிக்கை

## இந்திய அரசாங்கத்துக்கு தேசீய மகாநாடு கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 28

இந்த ஆண்டு இறுதிக்கு முன்பு போர்ச்சுகீசிய காலனிகளை விடுவிப்பதின் மூலம் இந்திய மண்ணில் மீதமாகவுள்ள அந்நிய ஆதிக்கத்துக்கும் முடிவுகட்டத் தேவையான தீவிர நடவடிக்கைகளைத்தையும் மேற்கொள்ளுமாறு கோவா பற்றிய தேசிய இயக்கக் கமிட்டியின் மகாநாடு கோரியது.

இரு தின மகாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானமொன்று இந்திய மண்ணில் போர்ச்சுகீசிய காலனி ஆதிக்கம் நீடிப்பது இந்திய நாட்டுக்கு அகௌரவமாகும் என்று கூறியது. போர்ச்சுக்கல்வாதங்களை ஐ. நா. தர்மகர்த்த கவுன்சில் நிராகரித்ததை தீர்மானம் வரவேற்றது. பொதுவாக காலனி ஆதிக்கம் குறித்து உலக நாடுகளின் கருத்து மாறுதல்களை யொட்டியும் முக்கியமாக ஆபிரிக்காவில் பல்வேறு விடுதலை இயக்கங்கள் வெற்றி பெற்றுள்ளதை அனுசரித்தும், இந்தியாவின் சுதந்திரம் பூரணத்துவம் அடைய முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதற்கு இது மிகவும் ஏற்ற தருணம் எனத் தீர்மானம் கூறியது.

தீர்மானம் மீது நடந்த விவாதத்தின் போது மெம்பர்களின் ஆத்திரம் நன்கு வெளிப்பட்டது. போர்ச்சுக்கலுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டுமெனச் சிலர் அபிப்பிராயப்பட்டனர்.

ஸலாஸர் 'ஆட்சிக்கு எதிர்ப்பு அதிகரித்து வருவதை மற்றொரு தீர்மானம் குறிப்பிட்டு எதிர்ப்பு சக்திகள் ஒன்றுபட வேண்டும் எனக் கோரியது.

கோவா விடுதலைக்கு ராணுவ நடவடிக்கையைத் தீர்மானம் பகிரங்கமாகத் தெரிவிக்காவிட்டாலும் தீர்மானத்தில் "அவசியமான தீவிரநடவடிக்கைகள்" எனக்கூறியிருப்பதனல் ராணுவ நடவடிக்கை விலக்கப்பட்டுவிடவில்லை என்று கமிட்டிக் காரியதரிசி கூறினர். 1961 இறுதியில் போர்ச்சுகீசிய பகுதிகள் விடுதலை பெருவிடில், மேற்கொண்டு நடவடிக்கை பற்றி ஆராய மற்றொரு தேசிய மகாநாட்டை கூட்டலாம் என்று அவர் சொன்னர்.

ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் உள்ள தனது காலனிகளில் போர்ச்கல் அடக்குமுறை ஆட்சியை நடத்தி வருவதற்கு பேச்சாளர்கள் கண்டனம் தெரிவித்தனர். தற்போது இங்கு நடைபெறும் உலக சமதானக் கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் மகாநாட்டில் தங்களது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

இந்தியாவிலுள்ள போர்ச்சுகீஸிய காலனிகளை விடுவிக்க ஆதரவைத் திரட்டுவதற்காக இம்மகாநாடு கூட்டப்பட்டது. இம்மகாநாட்டை லோக சபை சபாநாயகர் ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார் துவைக்கி வைத்தார்.

கோவானிய தலைவர் வண. பாதிரி மாஸ்கரென் ஹாஸ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

கோவானிய அரசியல் தியாகிகள் பலர் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

மகாநாட்டைத் துவக்கி வைத்து ஸ்ரீஅனந்தசயனம் அய்யங்கார் பேசுகையில், கோவா மக்களின் சலியாத போரட்டத்தைப் பாராட்டினர். மக்கள் எதிர்பார்க்கும் காலத்துக்கு முன்னதாகவே போர்சுக்சீசிய காலனிகள் விடுதலை பெறும் ரீதியில் சர்வதேச சூழ்நிலைகள் கூடிய சீக்சிரம் உருவாகும் என்ருர்.

20-ம் நூற்ருண்டில் இதர நாடுகளின் மீது போர்ச்சுகல் தனது ஆதிக்கத்தை நீடிப்பது எக்காரணத்தைக் கொண்டும் நியாயமாகாது என்று அவர் குறிப்பிட்டார்.

# "சுதந்திரம் சரியான வகையில் பயன்படுத்தப்படவில்லை"

—ராஜாஜி

சென்னை, மார்ச் 28

"நமதுநாடுசுதந்திரம் பெறுவதைப்பார்க்காமல் திரு. வ. வே. சு. ஐயர் மறைந்துவிட்டார். அந்தவிஷயத்தில் அவர் அதிர்ஷ்டசாலி" என நேற்று சென்னை நகராண்மைழகழகத்தில் வ. வே. சு. ஐயரின் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசிய ராஜாஜிகுறிப்பிட்டார்,

"நமக்கு சுதந்திரம் வந்த பிறகு என்ன இப்படி இருக்கிறதே என்று தோன்றுகிறது. கிடைத்த சுதந்திரம் சரியானபடி சரியான காரியத்திற்குப் பயன்படுத்தப்படவில்லையே என்று வருந்தும் துர்ப்பாக்கியசாலிகளாக நாம் உள்ளோம்" என்று ராஜாஜி கூறினர்.

ராஜாஜிஇவ்வாறு 'சுடச்சுட' குறிப்பிட்டதும் பலத்த கரகோஷம் எழுந்தது. கூட்டத்தில் சிரிப்பு எழுந்தது ஒரு கட்சியைத் தவிர பாக்கியுள்ள எல்லாக்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் என்பதைக் காட்டுகிறதென்றும் இருந்தாலும் இந்த விஷயம் சிரிக்க வேண்டிய விஷயமில்லையென்றும், வருந்தவேண்டிய விஷயமென்றும் அவர் கூறினர்.

"தியாகம் செய்தும் கஷ்டப்பட்டும் பெற்றசுதந்திரம் இனிப்பாக இல்லாமல் புளிப்பாக இருப்பதற்கே வருந்தவேண்டியுள்ளது.

இந்த மாம்பழத்தின் புளிப்பை எப்படி மாற்றுவது என்பதே இப்பொழுது பிரச்சினை. புளிப்புப் பழத்தைப் பழுக்கப் போட்டால் சரியாகிவிடும். நான் கூறுவதின் பொருள் உங்களுக்கு விளங்கும்என நினைக்கிறேன்" என்று ராஜாஜி கூறி முடித்ததும் பெருத்த கரகோஷம் எழுந்தது.

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்—அடிமைகள் அல்ல என்பதே எனது கட்சியின் கொள்கை. இதில் புதிதாக ஒன்றும் இல்லை. இது பழைய லட்சியம். அணுகும் முறைதான் புதிது" என்று அவர் கூறினர்.

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:

ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.